நிலா காமிக்ஸ்

கல்கியின்

# பொன்னியின் செல்வன்

காமிக்ஸ்



4

கல்கியின்

# பொன்னியின் செல்வன்


காமிக்ஸ்

நிலா

காமிக்ஸ்


www.nilacomics.com


வணக்கம்!
இளைய பிராட்டி குந்தவையிடம் சுந்தர சோழ சக்கரவர்த்தி கூறியதை கேட்டீர்கள் அல்லவா! இதிலிருந்து நாம் புரிந்து கொண்டது என்ன? அரசனாக இருந்தாலும், ஆண்டியாக இருந்தாலும் தாங்கள் எண்ணியபடியே அனைத்தும் நடந்துவிடாது என்பதுதான். மேலும் நமக்கு ஒரு விஷயம் தெளிவாக புரிகிறது. சக்கரவர்த்தியின் உடல் நலிவுக்கு, அவரது உடல் காரணம் அல்ல. மனம்தான் காரணம். அதனால்தான் "மனமது செம்மையானால் மந்திரம் செபிக்க வேண்டாம்" என்று அகத்தியர் கூறுகிறார். அகத்தியர் கூறும் இந்த வாக்கியத்தை மட்டும் சரியாக நாம் புரிந்து கொண்டோம் என்றால் நம் வாழ்நாள் முழுவதும் நாம் நோய் நொடி இன்றி வாழலாம்.
சரி வாருங்கள், சுந்தர சோழரின் வாய் மொழியாலேயே அவரின் வரலாற்றை கேட்போம்.



அப்போது ஒரு பெண்
அருள்மொழியை காப்பாற்றி
நம்மிடம் கொடுத்துவிட்டு
மறைந்துவிட்டாள்.
அருள்மொழியை தூக்கியபடி
படகின் அருகில் வந்தாள்.
அப்போது அவளை கண்டதும் மூர்ச்சையானேன். குழந்தை
கிடைத்த மகிழ்ச்சியில் நீங்கள் அனைவரும் இருந்தீர்கள்.
நீங்கள் அனைவரும் குழந்தையை காப்பாற்றி
கொடுத்தது பொன்னித்தாய் என்று எண்ணி அவளுக்கு சிலையெழுப்பியும்,
அருள்மொழியை பொன்னியின் செல்வன் என்றும் அழைத்து வருகிறீர்கள்.



இலங்கையில் என்னுடன் இருந்த அதே பெண்தான் அருள்மொழியை காப்பாற்றியவள். அவள்தான் என்னை இரண்டு மூன்று வருடகாலமாக இரவில் வந்து பயமுறுத்துகிறாள்.
அவள் பெண்ணல்ல, பேய்! என்னையும், அருள்மொழியையும் கொல்ல வந்தவள். அவள் என்னை இருபத்தி நான்கு ஆண்டுகளாய் என்னை பாடாய் படுத்துகிறாள்.



ஆ..... இன்னும் முக்கியமானதை நான் சொல்லவில்லை. அதையும் சொன்னால்தான் என் மனம் ஆறுதல் அடையும். இலங்கையிலிருந்து அழைத்து வர செய்த என் பாட்டன் பராந்தக சோழன்தான், என் இந்த நிலைக்கு காரணம்.


என் பெரியப்பாவின் மனசுக்கு ஈரேழு உலகத்தையும் பரிசாக தரலாம் அல்லவா? அப்படியிருக்கையில் அவரின் புதல்வன் மதுராந்தகன்தானே அடுத்து பட்டத்துக்கு வர வேண்டும். அதுதானே தர்மம்!



என்ன நண்பா? அதுதானே தர்மம்! எனக்காக நீ எவ்வளவு செய்திருக்கிறீர், எனக்காக இதையும் செய்யும். என் பெரிய அன்னையை நான் தஞ்சைக்கு அழைத்துதாக அழைக்க வேண்டும்.



அதுபோல் மதுராந்தகன்தான் அடுத்து பட்டத்துக்கு வர வேண்டும் என்பதை கூறி, நீர்தான் அவரை அதற்கு சம்மதிக்கும்படி செய்ய வேண்டும். சோழ நாட்டு மந்திரி மனது வைத்தால் முடியாதது கூட உண்டா?
எனது பெரியப்பாவின் மகன் மதுராந்தக தேவனுக்கு, அங்குலம் குறையாமல் இந்த ராஜ்யத்தை அவனுக்கு அளிப்பேன். புரிகிறதா..?



சக்கரவர்த்தி! தங்கள் கருத்துக்கு மாறாக தங்கள் புதல்வர்கள் நடக்க மாட்டார்கள்.
வானமாதேவி, மகாராணி.
நீர் உடனே புறப்படும். என் பெரிய அன்னையை எப்படியாவது மதுராந்தகனுக்கு பட்டம் கட்ட சம்மதிக்க செய்யும்.
இல்லையென்றால், என்னால் வர முடியாததை நினைத்து வருந்தியதையும் கூறி, அதனால் அவர் தங்களை தஞ்சைக்கு வரும்படி கேட்டுக் கொண்டார் என்று கூறும்.


அடுத்த நாள் காலை
கருடாழ்வார் மண்டபம்
சுந்தர சோழர் ஆதுரசாலை அடிக்கல் நாட்டு விழா!
குந்தவை பிராட்டி பழையாறையில் பராந்தக சக்கரவர்த்தியின் பெயரில் ஒரு வைத்தியசாலை நிறுவியது போல், தஞ்சையில் தந்தை சுந்தர சோழரின் பேரில் வைத்தியசாலை திறக்க அடிக்கல் நாட்டி, அதற்கான சாஸனம் எழுதி பொதுமக்கள் முன்னிலையில் வாசிக்கப்படுகிறது. அங்கு பொதுமக்கள், கிராமத்தலைவர்கள், ராஜகுலத்தினர், குந்தவை, நந்தினி, பெரிய பழுவேட்டரையர், சின்ன பழுவேட்டரையர் இன்னும் பல முக்கியஸ்தர்களும் கூடியிருந்தார்கள்.
துடும்... துடும்...
துடும்... துடும்...
துடும்... துடும்...



இதனால் சகலமானவர்களுக்கும் தெரிவிப்பது என்னவென்றால்....
இளவரசி இளைய பிராட்டி குந்தவை மக்கள் நலனை கருத்தில் கொண்டு ஆங்காங்கே ஆதுரசாலை அமைத்து வருவது போல், நமது தஞ்சையில் தனது தந்தை சுந்தர சோழ சக்கரவர்த்தியின் பேரில் ஆதுரசாலை அமைக்க, தனது சொத்துக்களை வழங்கி அதற்கான சாஸனம் எழுதியுள்ளார்.
டுடும்... டுடும்...



சாஸனம் படிக்கும் வைபவம் சற்று நேரத்தில் தொடங்க உள்ளது.
இளைய பிராட்டி குந்தவை தலைநகருக்கு வந்துட்டாங்கயில்ல, இனி நமக்கெல்லாம் ஒரே கொண்டாட்டம்தான்.
அனைவரையும் அமைதி காக்கும் படி கேட்டுக் கொள்கிறோம்.
இப்போது ஓதுவார்கள் தேவாரப் பாடல் பாடுவார்கள்.
நான்கைந்து ஓதுவார்கள் தேவாரப் பாடல் பாடுகிறார்கள்.
மந்திர மாவது நீறு
வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு
துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு
சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன்
திருஆல வாயான் திருநீறே.



வைபவம் ஒரு பக்கம் நடந்து கொண்டிருக்க, பழுவூர் இளையராணியும், இளைய பிராட்டி குந்தவையும் தங்களுக்குள் இருக்கும் பகைமையை தீர்த்துக் கொள்ள, துவங்கிவிட்டார்கள்.
தேவி! முன்னொரு காலத்தில் சம்பந்த பெருமாள் இந்த பாடலை பாடித் திருநீறு இட்டுப் பாண்டிய மன்னரின் நோயை தீர்த்தாரல்லவா? இப்போது ஏன் அந்த பாடலுக்கு அந்த சக்தி இல்லை? பாடலுக்கு சக்தியில்லாவிட்டாலும் திருநீற்றுக்கு சக்தி இல்லாமற் போய்விட்டதா?


ஆம் ராணி! அந்த நாளில் தர்மம் மேலோங்கி இருந்தது. அதனால் மந்திர திருநீற்றுக்கு அவ்வளவு சக்தி இருந்தது. இப்போது பாவம் மலிந்துவிட்டது. அரசருக்கு விரோதமாக சதி செய்யவும் துரோகிகள் நாட்டில் ஏற்பட்டிருக்கிறார்கள். ஆகையால்தான் மந்திரத்தின் சக்தி குறைந்து மருந்து தேவையாகிவிட்டது!


அப்படியா! அரசருக்கு விரோதமாக சதி செய்கிறார்களா என்ன? அவர்கள் யார்? (ஒன்றும் தெரியாதவள் போல் கேட்டாள்.)
அதுதான் எனக்கும் தெரியவில்லை? யார் என்று கண்டுபிடிப்பதற்கு சில காலம் இங்கேயே இருக்கலாமென்று பார்க்கிறேன்.
நல்ல தீர்மானம் செய்தீர்கள். தேவி! தங்களிடம் ஒன்று கேட்க வேண்டும். இராஜ துரோகத்தை காட்டிலும், பெரிய துரோகம் இன்னதென்று தங்களால் சொல்ல முடியுமா? (வந்தியத்தேவனை மனதில் நினைத்து)


நன்றாக சொல்ல முடியும். கை பிடித்த கணவனுக்கு பெண்ணாய் பிறந்த ஒருத்தி துரோகம் செய்தால் அதுதான் இராஜ துரோகத்தை காட்டிலும் கொடியது. (இப்படி சொல்லிவிட்டு குந்தவை நந்தினியின் முகத்தை உற்று பார்க்கிறாள்.)


தாங்கள் சொல்வது சரிதான்! ஆனால், சம்புவராயர் மகன் கந்தமாறன் இதை ஒப்புக்கொள்ள மாட்டான். எல்லாவற்றிலும் கொடிய துரோகம் சிநேகித துரோகம் என்று சொல்வான்.
ஓகோ, அப்படி வரியா! இப்போ என் ஆட்டத்தை பார்!
சோழநாட்டு வீரர்கள் ஈழத்தில் நடத்தும் யுத்தத்தை விட, பயங்கரமாக இருக்கிறது இவர்களின் மறைமுக யுத்தம்.



குந்தவையின் முகம் வாடுவதைக் கண்ட நந்தினி மேலும்,
அவனுடைய அருமை நண்பன் ஒற்றனாக மாறிப் போனதும் அல்லாமல், இவனுடைய முதுகில் குத்திவிட்டு ஓடிவிட்டானாம். அவனை பிடித்து வர என் மைத்துனர் ஆட்கள் அனுப்பியிருப்பதாக கேள்வி.
தமிழ் குலத்தில் பிறந்த பெண்கள், தான் கைபிடிக்க போகும் ஆடவனை அவ்வளவு எளிதில் விட்டு கொடுத்துவிட மாட்டார்கள்.
நிச்சயமாக அவன் ஒற்றன்தான் என்பது தங்களுக்கு எப்படி தெரியும்?
அவன் ஒற்றனோ, இல்லையோ? எனக்கு என்ன தெரியும்? சம்புவரையர் மகன் சொல்வதைத்தான் சொல்கிறேன்.
தாங்கள் வேண்டுமானால் நேரில் வந்து, அவனிடமே எல்லா விவரமும் கேட்டு தெரிந்து கொள்ளலாம். அவன் என் அரண்மனையில்தான் சிகிச்சை பெற்று வருகிறான்.
இவள் கூறுவது போலவே, இவள் அரண்மனைக்குச் சென்று சம்புவராயர் மகன் கந்தமாறனை சந்தித்தால் என்ன...?
டுடும்... டுடும்...


துடும்... துடும்...
திருமந்திர ஓலை நாயகர், ஓலை வாசிக்கிறார்.
மேலும், எனது தந்தை எனக்கு அளித்த நல்லூர் மங்கலம் கிராமத்தை, இன்றைய நாளிலிருந்து இறையிலிக் கிராமமாக அறிவித்துள்ளேன். நிலங்களை இந்த ஊர் விவசாயிகளே சகல உரிமையுடன் அனுபவித்துக் கொண்டு, தஞ்சாவூர் சுந்தர சோழ ஆதுரசாலை வைத்தியருக்கு,
ஆண்டு ஒன்றுக்கு இருநூறு கலம் நெல்லும், ஆதுரசாலையில் சிகிச்சை பெறும் நோயாளிகளுக்காக தினந்தோறும் ஐம்பது படி பசும் பாலும், ஐந்து படி ஆட்டு பாலும், நூறு இளநீரும் அனுப்ப வேண்டும், என்று கேட்டுக் கொள்ளப்படுகிறது. (இப்படிக்கு சோழநாட்டு இளவரசி குந்தவை பிராட்டி)
துடும்... துடும்...
துடும்... துடும்...



இளைய பிராட்டி குந்தவை வாழ்க!
சுந்தர சோழர் வாழ்க!
ஈழங்கொண்ட இளவரசர் அருள்மொழி வாழ்க!
சிவஞான கண்டராதித்தரின் தவப் புதல்வர் மதுராந்தகர் தேவர் வாழ்க!
தஞ்சாவூர் கோட்டை தளபதி காலாந்தக கண்டர் வாழ்க!
வீரபாண்டியன் தலை கொண்ட வீராதி வீரர் ஆதித்த கரிகாலர் வாழ்க!
இதை கேட்டு நந்தினியின் முகம் கருமையாக மாறுகிறது.
தலையை வெட்ட அப்படி என்ன வீரம் வேண்டி இருக்கும்?
சின்ன பழுவேட்டரையர் தனது அண்ணன் பெரிய பழுவேட்டரையரை பார்க்கிறார். பெரிய பழுவேட்டரையர் கருகரு என்று முகத்தை வைத்துக் கொள்கிறார்.
தனாதிகாரி பெரிய பழுவேட்டரையர் வாழ்க!
ஆதுரசாலை அடிக்கல் நாட்டு விழா இத்துடன் முடிவடைகிறது.


கருடாழ்வார் மண்டபத்திலிருந்து தன் அரண்மனைக்கு வந்து...
ஜனங்களாம், ஜனங்கள்! அறிவற்ற ஆடு மாடுகள்! நாலு பேர் எந்த வழி போகிறார்களோ, அதே வழியில் நாலாயிரம் பேரும் போகும் மூடர்கள்...!
இந்த ஊருக்கு வரியை தள்ளிவிடு, இந்த கிராமத்தை இறையிலி கிராமமாக அறிவித்துவிடு என்று கட்டளையிட்டுக் கொண்டே செல்கிறார்...
சக்கரவர்த்தி சொர்க்கத்துக்கு போவதற்கு முன் சாம்ராஜ்யத்தை பாழாக்கி விட்டுத்தான் போவார் போலிருக்கிறது...!
பழுவேட்டரையரின் கோபக்குரல் கேட்டு கீழிருந்து காவலர்கள் மேலே பார்க்கிறார்கள்.


அண்ணா! இப்படியெல்லாம் சத்தம் போடுவதில் என்ன பயன்? காலம் வரும் வரையில் காத்திருந்து காரியத்தில் காட்ட வேண்டும்.
பழுவேட்டரையரின் கோபக்குரல் கேட்டு நந்தினி அங்கு வருகிறாள்...
நாதா! என்ன நடந்துவிட்டது, ஏன் இந்த கோபம்?
நந்தினியை பார்த்து....
இது என்ன! நான் கேள்விப்படுவது? அந்த அரக்கி இங்கு எதற்காக வர வேண்டும்? அவள் உன்னை அவமானம் படுத்தியதையெல்லாம் மறந்துவிட்டாயா?


இதற்குத்தானா இவ்வளவு கோபம்!.... ஒருவர் எனக்கு செய்த நன்மையையும், நான் மறக்க மாட்டேன். இன்னொருவர் எனக்கு செய்த தீமையையும் மறக்க மாட்டேன்.
அப்படியென்றால் அவள் இங்கு எதற்காக வருகிறாள்?
அவள் இஷ்டம், வருகிறாள்! சக்ரவர்த்தியின் குமாரி என்ற இறுமாப்பில் வருகிறாள்!
என்னால் அவளை பொறுத்துக் கொள்ள முடியாது. அவள் வரும் சமயம் நான் இந்த அரண்மனையில் இருக்க விரும்பவில்லை. எனக்கு மழபாடியில் கொஞ்சம் அலுவல் இருக்கிறது, நான் போய் வருகிறேன்.


நாதா! நானே சொல்லலாம் என்று இருந்தேன். அந்த விஷ பாம்பை என்னிடமே விட்டுவிடுங்கள். அவளுடைய விஷத்தை இறக்குவது எப்படி என்று எனக்கு தெரியும்! நான் பார்த்துக் கொள்கிறேன்...
இனியும் நாம் இங்கிருந்தால் ஏதாவது விபரீதம் ஏற்படும்!
தாங்கள் வரும் போது ஏதேனும் சில அதிசயமான செய்திகளை கேள்விப்பட்டால், அதற்காக தாங்கள் வியப்படைய வேண்டாம்!
சின்ன பழுவேட்டரையர் சட்டென்று...
அண்ணா! எனக்கு கொஞ்சம் வேலையிருக்கிறது, நான் வருகிறேன்.



நந்தினியின் கொஞ்சல் பேச்சை சகிக்க முடியாமல் அங்கிருந்து சென்றுவிடுகிறார் சின்ன பழுவேட்டரையர்.
நந்தினியின் கொஞ்சல் பேச்சை சகிக்க நம்மால் முடியவில்லை. பெரியவருக்கு அவளின் பாசாங்கு தனத்தை எப்படி சொல்லி புரிய வைப்பது என்றே எனக்கு தெரியவில்லை.


இளையவரை கையாள்வது கொஞ்சம் கடினம்தான்! இவரிடம் நாம் கவனமாகத்தான் இருக்க வேண்டும்.


சின்ன பழுவேட்டரையர் இடையில் அங்கிருந்து சென்றதை பொருட்படுத்தாமல்...
அவன் போகட்டும், நீ சொல் என் கண்ணே! என்ன மாதிரி அதிசயமான செய்திகள்?!



குந்தவை பிராட்டி கந்தமாறனை திருமணம் செய்து கொள்ள போவதாகவோ, அல்லது ஆதித்த கரிகாலன் கந்தமாறனுடைய தங்கையை மணக்க போவதாகவோ கேள்விப்படலாம்.
ஐயையோ! என்ன சொல்கிறாய்? அப்படியென்றால் மதுராந்தகனுக்கு பட்டம் கட்டும் நம் யோசனை?
பேச்சு நடந்தால், காரியமே நடந்துவிடுமா என்ன? அப்படியே இருந்தாலும் பெண்ணைப்போல் நாணிக்கோணி நடக்கும் மதுராந்தகனுக்கு பட்டம் கட்டுவதற்காகவா... நாம் இவ்வளவு பாடுபடுகிறோம்?
என்று கூறி தன் கரிய கண்ணினால் பழுவேட்டரையரை பார்க்கிறாள்.


ஒரு நாட்டின் சக்கரவர்த்தினியாக இருக்க அனைத்து தகுதியும் உன்னிடம் இருக்கிறது.
சுந்தர சோழ சக்கரவர்த்தியின் செல்வ புதல்வி, இளைய பிராட்டி குந்தவை தேவி, பெரிய பழுவேட்டரையர் அரண்மனைக்கு வருகிறார். பராக்! பராக்!!
அந்த ராட்சஸி வருவதற்குள், நான் இங்கிருந்து புறப்படுகிறேன்.
அந்த விஷப் பாம்பை நான் பார்த்துக் கொள்கிறேன். நீங்கள் சென்று வாருங்கள்.....


பழுவேட்டரையர் கோபமாக மழுபாடிக்கு செல்ல, கடம்பூர் இளவரசர் கந்தமாறனை பார்க்க இளைய பிராட்டி குந்தவை பழுவூர் அரண்மனைக்கு வருகிறாள்.
குந்தவை வரும் நேரத்தில், தான் அங்கு இருக்க வேண்டும் என்பதற்காக கந்தமாறன் இருக்கும் அறைக்கு வந்து காத்திருக்கிறாள் நந்தினி.



கந்தமாறரே, தங்களைக் காண இளவரசி வரப்போகிறார்!


யாரு! இளைய பிராட்டி குந்தவையா? என்னை பார்க்க வருகிறாரா?
!
அதில் என்ன சந்தேகம்? ஒரு ராஜகுமாரனை பார்க்க, ஒரு ராஜகுமாரிதான் வருவாள்.
என்று பொடி வைத்து கூறினாள்.
அவர் ஏன் என்னை பார்க்க வர வேண்டும்? அவரை நான் சந்திப்பதாக இல்லை.


சுந்தர சோழ சக்கரவர்த்தியின் செல்வ புதல்வி, சோழ நாட்டின் தவ புதல்வி, இளைய பிராட்டி குந்தவை பராக்...! பராக்...!
ஐயா! நான் சென்று இந்த ராஜகுமாரன் சார்பாக அந்த ராஜகுமாரிக்கு வரவேற்பு உபசாரங்கள் செய்து அழைத்து வருகிறேன்.
தாங்கள் சற்று நேரம் அமைதி காத்தருளுங்கள். (என்று மீண்டும் கந்தமாறனை சீண்டிவிட்டு செல்கிறாள்.)
இளைய பிராட்டி வரப்போகிறாரா? என்ன என் பாக்கியம்!


அப்போது கந்தமாறன் வாசனை திரவியங்களை (ஜவ்வாது) எடுத்து தனது அங்கங்களில் தடவிக் கொள்கிறான்.
ஆகா! என்ன மணம்...!
என்ன மணம்...!


அவர்கள் வரும் காலடிச் சத்தம் கேட்டு...
ஜல்... ஜல்...
மீண்டும் பழையபடி படுத்துக் கொள்கிறான்.
ஆஹா! இளைய பிராட்டி தம்மை பார்க்க வருவார் என்று தெரிந்திருந்தால் இன்னும் பல இடங்களில் குத்துகள் வாங்கியிருக்கலாமே!!
குத்தியவன் யாராயிருந்தாலும் மார்பிலே குத்தியிருக்கக் கூடாதா? இப்படி முதுகிலே குத்திவிட்டானே! இந்த நேரத்திலா இளைய பிராட்டி நம்மை வந்து பார்க்க வேண்டும்.
வீரர்கள், அக்காலத்தில் மார்பில் காயப்படுவதை பெருமையாகவும், முதுகில் காயப்படுவதை அவமானமாகவும் கருதினார்கள்.


இளைய பிராட்டி குந்தவையை, கந்தமாறனின் அறைக்கு இளையராணி நந்தினி அழைத்து வருகிறாள்.
தனாதிகாரியை எங்கே காணோம்?
அவருக்குத்தான் ஓய்வு ஏது? அவர் நாடு நாடாக சென்று வரி வசூலித்தால்தானே, நாமெல்லாம் நம் இஷ்டப்படி செலவழிக்க முடியும். (என்று சுத்தி காட்டினாள்.)


சக்கரவர்த்தியின் தவப் புதல்வியே வர வேண்டும்! வர வேண்டும்!


தாங்கள் எழுந்திருக்க வேண்டாம். அப்படியே ஓய்வு எடுத்தபடியே இருக்கலாம். இளைய பிராட்டி தவறாக எடுத்துக் கொள்ளமாட்டார்.